கூடுதல்   மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண்          22/2021

வாதி தரப்பு சாட்சி – 3 சிவக்குமார் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 07.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**9 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. தாவா கோவில் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளது என்றால சரிதான். தாவா கோவிலில் பொதுவாக பலதரப்பு மக்கள் வந்து வழிபடுவது வழக்கம் என்றால் சிதான். அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட இடத்தில் கோவில் இருப்பதால் அரசு அதிகாரிகளை இவ்வழக்கில் தரப்பினர்களா சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் மாவட்ட ஆட்சித்தலைவர் தரப்பினராக உள்ளார். தாவா கோவிலில் பூசாரி உள்ளரா என்றால் உள்ளார். மேற்படி பூசாரிக்கு அறநிலைய துறை சார்பாக அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2. நான் பூசாரியா என்றால் ஆமாம். நான் வேல் பூசாரி ஆவேன். நான் பூசாரி இல்லாததால் தான் மேற்படி அறநிலைய துறையால் அடையாள அட்டை வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. நடு பண்ணையை சேர்ந்த நபர்களால் குறிப்பிடப்பட்ட நான்கு நபர்கள் மட்டுமே பூசாரியாக பூஜை செய்து வருகிறோம். அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட இடத்தில் கோவில் கட்டுவதற்கு அனுமதி பெற்றோமா என்றால் இல்லை. கோவில் நத்தம் புறம்போக்கில் தான் உள்ளது. தாவா கோவிலின் மின் இணைப்பு எண் என்ன என்றால் மின் இணைப்பு எண்.64 ஆகும். தாவா கோவிலுக்கு செலுத்திய மின் கட்டனத்திற்கான இரசீதுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 2021 முதல் 2025 வரையான ஆண்டுகளுக்கு மின் இணைப்பு இரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எங்கள் வசம் உள்ளது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள் மின் கட்டன இரசீதுகள் தாவா கோவிலுக்கு கட்டப்பட்ட இரசீதுகள் என்று என்னால் கூற முடியாது என்றால் சரியல்ல. 1 முதல் 8 பிரதிவாதிகள் யார் என்றால் பெரிய மற்றும் சின்னை பண்ணையை சேர்ந்தவர்கள் ஆகும். வாதிகளும், நானும் நடுப்பண்ணையை சேர்ந்தவர்கள் ஆவோம். பெரிய பண்ணை, சின்ன

பண்ணை மற்றும் நடுப்பண்ணை என்பதை பிரித்து காண்பதற்கு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் வரி ஏடு தான் உள்ளது.

4. தாவா கோவிலில் சாமி கும்பிடுவது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு கடவூர் வட்டாட்சியர் தலைமையில் சமாதான பேச்சு வார்த்தை நடைபெற்றது என்றால் சரிதான். சாமி கும்பிடுவது சம்மந்தமாக வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் இருவர் மீது குற்றவியல் வழக்கோ, வழக்கு நடைவடிக்கையோ ஏற்பட்டதா என்றால் இல்லை. மேற்படி வட்டாட்சியர் தலைமையில் சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்ற போது இந்து அறநிலைய துறையின் ஆய்வாளர் கலந்து கொண்டார் என்றால் இல்லை. கடவூர் தாலுகாவின் கீழ் உள்ள அனைத்து இந்து கோவில்களும் இந்து அறநிலைய துறை கட்டுப்பாட்டிற்குள் தான் உள்ளது என்றால் சரியல்ல.

5. இந்து அறநிலைய துறையை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்திருந்தால் உண்மையான விவரங்கள் தெரியவரும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் அரசு தரப்பு மற்றும் மற்ற பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்களை தெரிந்து கொண்டு தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்து அறநிலைய துறையை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று பிரதிவாதிகளால் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

6. தாவா கோவில் அரசு பாத்தியப்பட்ட நிலத்தில் உள்ளதால் அரசு அலுவலர்களை இவ்வழக்கில் தரப்பினர்களா சேர்க்காமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. இவ்வழக்கு பகைமையின் காரணமாக வேண்டுமென்றே தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai**